**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழ் இலக்கணம் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
2. எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம் ஆகிய இரண்டு இலக்கணங்களைக் கூறும் நூல் எது?
3. செய்யுளில் வரும் சொற்கள் எத்தனை வகைப்படும் அவை யாவை?
4. யாப்பு இலக்கணத்தின் உறுப்புகள் யாவை?
5. மெய் எழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. சார்பு எழுத்து எத்தனை வகைப்படும்?
7. உயிர் எழுத்துகளின் பிறப்பிடம் குறித்துத் தொல்காப்பியம் கூறுவது யாது?
8. ஓர் எழுத்து ஒரு மொழி என்றால் என்ன?
9. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்?
10. தொல்காப்பியர் நிலைமொழியை எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?
11. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் மொத்தம் எத்தனை?
12. நாற்கணம் யாவை?
13. தாழ்+கோல் – எவ்வாறு புணரும்?
14. சுரும்பு என்பதன் பொருள் என்ன?
15. குறிப்பு வினையெச்சத்தை மொழியியலார் எவ்வாறு குறிப்பிடுவர்?

**பிரிவு – 2**

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. மாத்திரை என்றால் என்ன?
2. வினைச்சொல்லின் இலக்கணம் யாது?
3. மெய் எழுத்துகளின் பிறப்பிடம் குறித்துத் தொல்காப்பியமும் நன்னூலும் கூறும் கருத்துகளில் உள்ள ஒற்றுமைகள் யாவை?
4. பதம் என்பதன் பொருள் வரையறை கூறுக?
5. இறந்தகால இடைநிலைகள் யாவை? எ.கா. தருக.
6. உயிர் முன் உயிர் புணர்தல் என்றால் என்ன?
7. புளி என்னும் சொல்லுக்குப் புணர்ச்சி விதியாக நன்னூலார் கூறுவது யாது?
8. மருஉச் சொற்கள் என்றால் என்ன? சான்று தருக.

**பிரிவு – 3**

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) அகப்பொருள் இலக்கணம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சார்பு எழுத்துகளின் வகைகளை விளக்குக.

2. (அ) மெய் எழுத்துக்களின் பிறப்புக் குறித்துத் தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரண்டு நூல்களும் தெரிவிக்கும் கருத்துக்களின் ஒற்றுமை, வேற்றுமைகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பகாப்பதம் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்கி வரைக.

3. (அ) எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி – பொதுவிதி குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) இக்காலத் தமிழில் வல்லினம் மிகு இடங்கள் குறித்து விளக்குக.

•••••••